ஸ்ரீ:



ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# எதிராசன் வாசகத்தோர் எழில் சரிதம் - 55

## ஸ்ரீமதுபயவே. கோயில். சப்தம். வங்கீபுரம். வாஜபேயம். மருத்துவான்பாடி. வீராபுரம். வேங்கட தீக்ஷிதார்ய மஹாதேசிகன்

(ஸ்ரீமதுபயவே. திருமலை. சதுர்வேத சதக்ரது. நாவல்பாக்கம். சித்தியார்ய ராமாநுஜ தாததேசிகன்)

==========================================================================

## முன்னுரை

வங்கீசகுலவார்த்தீந்தும் விஜ்ஞானப்ரவணம் சுசிம் |
விரக்த்யாசார ஸம்பன்னம் வந்தே வேங்கடதீக்ஷிதம் ||

"ஸரோபூதவேதாள" என்று முதலாழ்வார்கள் மூவர்கள் முறையே குறிப்பிடும்படி இருக்க ஸ்வாமி தேசிகன் "பூதஸரோவேதாளான்" என்று முதலிலே வைத்துப் பாடும்படியான பெருமை பெற்ற பூதத்தாழ்வார் அவதார ஸ்தலமான திருக்கடல்மலை க்ஷேத்ரத்திற்குட்பட்டது வீராபுரம் என்னும் ஸ்ரீவைஷ்ணவ அக்ரஹாரம். அதை ப்ரதிஷ்டை பண்ணி அக்நிஹோத்ராதி நித்ய கர்மானுஷ்டானாதிகளைச் செய்து "ஸத்ஸந்தான ப்ரஸூத ஸதாசாரஸம்பன்ன வேதவிதாசார்ய" என்று ஸ்ரீபாஷ்யகாரரால் ஸ்ரீபாஷ்யத்தில் எடுத்துக்காட்டப்பட்ட ஸதாசார்ய லக்ஷணங்களுக்கு லக்ஷ்யபூதர்களாய் விளங்கி "கோயில் சப்தம் வங்கீபுரம் வாஜபேயம்" என்றபடியான ஜ்ஞானம், அனுஷ்டானம், வைராக்யம், பக்தி

ஆகியவைகளை ப்ரகாசிக்கச் செய்யும்படியான அன்வர்த்த பிருதுகளை அலங்கரித்த ஆசார்யபுருஷ வம்சத்தில் பாரத்வாஜ கோத்ரத்தில் அவதரித்தவர் வீராபுரம் ஸ்ரீமதுபயவே. வேங்கட தீக்ஷிதர் ஸ்வாமி ஆவார்.

## பாரத்வாஜ கோத்ர ப்ரபாவம்

ஒவ்வொரு வம்சத்திலும் முதலிலே கூறப்படுபவர் கோத்ர ரிஷியாவார். அவரை அடுத்துக் கூறப்படுபவர் ப்ரவர ரிஷிகளாவர். பாரத்வாஜ வம்சத்தின் கோத்ர ரிஷி ஆங்கிரஸ். ப்ரவர ரிஷிகள் ப்ருஹஸ்பதியும், பாரத்வாஜரும் ஆவர். இவர்களில் ஆங்கிரஸ் ப்ரஹ்மாவின் புத்ரர்களான ஸப்தரிஷிகளில் கடைசி பிள்ளையாவார். இவர் வேதங்களில் மிகவும் புகழப்படுகின்றவர். பல வேத மந்த்ரங்களை ஸாக்ஷாத்கரித்தவர். பாலப் பருவத்திலேயே சாஸ்த்ரங்களைக் கற்றுத் தேர்ந்து தன்னை விட வயதில் பெரியவர்களுக்கு ஆசார்யராய் விளங்கி அவர்களை, "ஹே! குழந்தைகளே" என்று கூறி உபதேசம் செய்தார் என்ற ப்ரஸித்தியை உடையவர் இவர். முதல் ப்ரவர ரிஷியான ப்ருஹஸ்பதி தேவர்களின் குருவாக விளங்கியவர். அத்யாத்ம வேதாந்த சாஸ்த்ர ப்ரவர்த்தகராய் விளங்கியவர். வேத பூர்வ காண்டத்திலும், உத்தர காண்டத்திலும் (உபநிஷத்துக்கள்) இவரது புகழ் பேசப்பட்டுள்ளது. மற்ற ப்ரவர ரிஷியான பரத்வாஜர் வேதத்தில் மிகவும் புகழப்பட்டவர். தனது வாழ்நாள் முழுவதையும் வேத அத்யயனத்திலேயே கழித்துவிட வேண்டும் என்று முயன்று பல நூற்றாண்டுகள் அத்யயனம் செய்தும் வேதம் முழுவதையும் கற்கமுடியாமல் இருப்பதைக் கண்டு இந்த்ரனால், கற்றது கைம்மண் அளவு, கல்லாதது உலகளவு என்று உணர்த்தப்பட்ட இவர் வேதங்கள் முடிவற்றவை என்பதனை உலகத்தாருக்கு விளங்கவைத்தவர். இவரது பெயராலேயே இந்த கோத்ரம் வழங்கப்பட்டு வருகிறது. இவர் வால்மீகி மஹர்ஷியின் சிஷ்யர் என்று ஸ்ரீமத் ராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் பரத்வாஜர் பரதனுக்கும், ஸ்ரீராமனுக்கும் ஆதித்யம் செய்து பல மந்த்ர சாஸ்த்ரங்களை அளித்தவர் என்ற புகழை உடையவர். இவரிடம் ராமனுக்கு, மிகுந்த அபிமானம் இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த கோத்ரத்தினர், ரிக், யஜுர், ஸாமம், அதர்வணம் ஆகிய நான்கு

சாகைகளிலும் உள்ளவராவார். இந்த கோத்ரத்தைச் சேர்ந்த இந்தச் சரித்ர நாயகர் யஜுர் வேதத்தைச் சேர்ந்தவராவார்.

## வங்கீபுரத்தாய்ச்சிகள்

பாரத்வாஜ கோத்ரத்தைச் சேர்ந்த இவர் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்து ஸ்ரீரங்கநாதனுக்குக் கைங்கர்யம் செய்துவந்தார். ஸ்ரீவைஷ்ணவ ஆசார்யராக விளங்கிய இவர் ஸ்ரீவைஷ்ணவ தர்சன ஸ்தாபகரான சடமர்ஷண கோத்ரத்தைச் சேர்ந்த ஸ்ரீமந் நாதமுனிகளின் மாமனார் என்ற சிறப்பினைப் பெற்றவர். இவர் ஸ்ரீரங்கநாதனுக்கு ப்ரதிதினம் இரவில் "குழம்புப்பால்" அமுது செய்வித்தபடியால் எம்பெருமான் மகிழ்ந்து "அம்மாள்" என்றும், "ஆய்ச்சி" என்றும் திருநாமம் சாத்தி அனுக்ரஹித்தார். அதுமுதல் இவர் "கோயில் அம்மாள்" என்றும், "கோயில் ஆய்ச்சி" என்றும் "வங்கீபுரத்தாய்ச்சி" என்றும் ப்ரஸித்தி அடைந்தார். இவர் வம்சஸ்தர்கள் தமது பெயருக்கு முன்னால் "கோயில்" என்ற விருதினைப் பெற்று விளங்கிவருகின்றனர். ஒரு ஸமயம் ஸ்ரீரங்கத்தில் ஒரு கன்யகை ஒரு நந்தவனத்தில் அழுது புலம்பித் தான் காஞ்சி தேவப்பெருமாளைப் பர்த்தாவாக அடையவேண்டிப் பாரித்திருந்ததைக் கண்ட இவர், அந்த கன்னிகையை ஸ்ரீமஹாலக்ஷ்மியாகவே கருதி அவளைக் காஞ்சிக்கு அழைத்துவந்து ஸ்ரீதேவாதிராஜனை ஸேவை பண்ணிவைக்கக் கருதி எம்பெருமான் மூலஸ்தானத்திலுள்ள திருவெண்ணாழி ப்ரதக்ஷிணம் வழியாக அழைத்துவந்தார். தாம் முன்னே செல்ல உடன் வந்த கன்யகைக்கு தேவாதிராஜனின் ஸேவையைப் பண்ணிவைத்தபோது அவள் எம்பெருமானிடத்தில் லயத்தை அடைந்தாள். இதைக்கண்ட தேவஸ்தான அதிகாரிகள் திருவெண்ணாழி ப்ரதக்ஷிணத்தில் மற்றவர் யாரும் வரக்கூடாதென்று கருதி மூடிவிட்டார்கள். அதற்குப் பின் இவர் திருக்கண்ணபுரம் சென்று ஸ்ரீ சௌரிராஜப் பெருமாள் ஸன்னதியில் "பஞ்சாங்க படன" கைங்கர்யத்தில் ஈடுபட்டு வந்தார். இப்படிக் கோயில், பெருமாள்கோவில், திருக்கண்ணபுரம் எம்பெருமான்களுடைய

கைங்கர்யங்களில் ஈடுபட்டமையால் இவரது தனியன் கீழ்க்கண்டவாறு அமைந்தது.

மாதரம் ரங்கராஜஸ்ய ஸௌரிராஜ புரோஹிதம் ।
ச்வசுரம் தேவராஜஸ்ய வந்தே வங்கீபுராதிபம் ॥

## வங்கீபுரத்து நம்பிகள்

வங்கீபுரத்தாய்ச்சியின் குமாரர் ஆய்ச்சியார். இவர் குமாரர் ஆச்சான். இவர் குமாரர் ஆய்ச்சி. இவர் குமாரர் ஆய்ச்சியார். இவர் குமாரர் வங்கீபுரத்தாச்சான். இவர் குமாரர் வங்கீபுரத்து நம்பிகள். இவர் ஸ்ரீபாஷ்யகாரரின் ப்ரதான சிஷ்யராய் 74 ஸிம்ஹாஸனாதிபதிகளில் ஒருவராய்க் கோயிலில் எழுந்தருளியிருந்து ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனம் செய்தருளினார். இவர் இயற்றிய க்ரந்தம் வங்கீச காரிகையாகும். ஸ்ரீபாஷ்யகாரர் தமது ஆராத்ய தேவதைகளான ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனையும், தேவாதிராஜனையும், மற்றும் ஸுதர்சன பாஞ்சஜன்யங்களையும் இவருக்கு ப்ரஸாதித்து ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனம் செய்யும்படி நியமித்து "நம்பிள்ளான்" என்று கூறி ஆலிங்கனம் செய்து திருநாமம் ஸாதித்தருளினார். இதனால் இவரது தனியன் கீழ்க்கண்டவாறு அமைந்தது.

பாரத்வாஜகுலோத்பூதம் லக்ஷ்மணார்ய பதாச்ரயம் ।
வந்தே வங்கீபுராதீசம் நம்பிள்ளார்ய குரும் பரம் ॥

## மருத்துவான்பாடி ராமாநுஜ தீக்ஷிதர்

வங்கீபுரத்து நம்பிகளின் குமாரர் குருகேசன். இவர் குமாரர் விஷ்ணுசித்தன். இவர் குமாரர் வேங்கடேசன். இவர் குமாரர் ஸ்ரீரங்கநாதாசார்யர். இவர் குமாரர் ஹஸ்திகிரீசாசார்யர். இவர் குமாரர் வேங்கடேசாசார்யர். இவர் குமாரர் வேங்கடாசார்யர். இவர் குமாரர் தேவராஜாசார்யர். இவர் குமாரர் வரதாசார்யர், இவர் குமாரர் ஸ்ரீரங்காசார்யர், இவர் குமாரர் வேதமையாசார்யர். இவர் குமாரர் ப்ரணதார்திஹராசார்யர். இவர் குமாரர் வேங்கடதேசிகன். இவர்

அஹோபில மடத்தில் ஆறாவது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் ஷஷ்டபராங்குச ஸ்வாமி என்கிற ப்ரஸித்தியுடன் எழுந்தருளியிருந்தவர். இவர் ஸாதித்த க்ரந்தங்களாவன: 1. ஸித்தாந்த சிந்தாமணி தீபம், 2. பஞ்சகால தீபிகை, 3. ப்ரபத்தி ப்ரயோகம், 4. நருஸிம்ஹஸ்தவம், மற்றும் பல. இவர் குமாரர் ரங்கநாதாசார்யர். இவர் குமாரர் அப்பைய தேசிக யஜ்வா. இவரது ஜ்யேஷ்ட குமாரர் ராமாநுஜ தீக்ஷிதர். இவரது கனிஷ்ட குமாரர் வேங்கட தீக்ஷிதர். ஸ்ரீ ராமாநுஜ தீக்ஷிதரே மருத்துவான்பாடி தீக்ஷிதர் என்ற ப்ரஸித்தியை உடையவர். இவர் மருத்துவான்பாடி, வீராபுரம், கோழியாலம், இளங்காடு, தேமாலை ஆகிய இடங்களில் வசிப்பவர்களின் கூடஸ்தராவார். இவர்களில் இளங்காட்டைச் சேர்ந்தவர்களில் ஒருவர் அஹோபில மடத்தில் 7வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் ஸ்ரீ சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் என்ற திருநாமத்துடன் எழுந்தருளியிருந்தவர். இவர் "சதலேகிநீ லேகனானுகுண கவிதாதுரந்தரர்", "கவிதார்கிக கண்டீரவர்" என்றபடியான பிருதுகளைப் பெற்றவர். இவர் அருளிச்செய்த க்ரந்தம் "வாஸந்திகா பரிணயம்" கனிஷ்டரான வேங்கட தீக்ஷிதர் அம்மணம்பாக்கம் மற்றும் களத்தூரில் வசித்தவர்களின் கூடஸ்தராவார்.

மருத்துவான்பாடி ராமாநுஜ தீக்ஷிதர் மருத்துவான்பாடியில் பல யஜ்ஞங்களைச் செய்து பெருமாள் கோயிலில் அஷ்டபுஜத்தில் வாஜபேய யஜ்ஞத்தை அநுஷ்டித்து அங்கேயே வாஸம் செய்துவந்தார். அப்பொழுது ஸ்ரீமஹாலக்ஷ்மீ அவதாரபேதமான "வேதவதீ மூர்த்தி" மந்த்ர ஜபம் செய்து உண்டான ஸாக்ஷாத்காரத்தால் வேதவதீமூர்த்தியை (திவ்யமங்கள விக்ரஹத்தை) தனது சிஷ்யனான சந்த்ரகிரி அரசனின் ஸஹாயத்தைக் கொண்டு எழுந்தருளப்பண்ணி ஸ்ரீ தேவாதிராஜனுக்கு ஒரு பங்குனி உத்திர தினத்தில் விவாஹோத்ஸவம் பண்ணிவைத்தார். இவர் "நான்மறையாளர்" என்று ப்ரஸித்தி பெற்றிருந்தபடியால் இவரால் எழுந்தருளப்பண்ணப்பட்ட வேதவதீமூர்த்தி மறையாள நாச்சியார் எனப்பட்டார். மேற்கொண்டு இவர் தமது சொந்த த்ரவ்யத்தைக்கொண்டு ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் லயார்ச்சாரூபமான திருமார்பு லக்ஷ்மியை ஸ்ரீதேவாதிராஜனுக்கு பூஷணரூபமாய் ஸமர்ப்பித்து க்ருதார்த்தரானார். இந்தக் கைங்கர்ய

ப்ரயுக்தமாய் இவரது வம்சஸ்தர்கள் வைசாகோத்ஸவ ரதோத்ஸவத்தன்று எம்பெருமான் ஸன்னதிக்குத் திரும்பி எழுந்தருளியதும் திருத்தேர் ஸம்பாவனையை அத்யாபி ஸமர்ப்பித்து வருகின்றனர்.

ஒரு ஸமயம் தமது சிஷ்யரான சந்த்ரகிரி அரசனின் ஸபையில் "நாராயண சப்த விசாரம்" நடந்தபொழுது நாராயண பாரம்யத்தை ஸ்தாபித்து "ணத்வ ஸமர்த்தனம்" என்னும் க்ரந்தத்தைச் செய்தருளி தமது வ்யாகரண சாஸ்த்ர (சப்த சாஸ்த்ர) புலமையை வெளிப்படுத்தி சைவர்களை வென்றபடியால் இவருக்கு சப்தப்ரஹ்மம் என்ற விருது வழங்கப்பட்டது. இவரது முன்னோர்கள் வங்கீபுரத்தாச்சி முதலானோர் ஸ்ரீரங்கத்தில் (கோயிலில்) கைங்கர்யம் செய்துவந்தபடியால் இவரது ஸந்ததியினர் "கோயில் சப்தம் வங்கீபுரம் நம்பிகள்" என வழங்கப்பட்டனர். இவர் செய்தருளிய க்ரந்தங்களாவன: 1. பும்ஸூக்த பரிஷ்கரணம், 2. ந்யாய மீமாம்ஸா சப்த ரத்னாகரம், 3. துரர்த்த தூரீகரணம் ஆகியவை. இவரது தனியன் வருமாறு:

ச்வசுரம் தேவராஜஸ்ய ராமானுஜ குரும்பஜே ।
யோயஜத்வாஜபேயாத்யை: யஜ்ஞைர் யஜ்ஞபதிம் ஹரிம் ॥

## வீராபுரம் ராமானுஜ தீக்ஷிதர்

மருத்துவான்பாடி ராமானுஜ தீக்ஷிதருக்கு இரண்டு பத்னிகள். ஜ்யேஷ்டபத்னிக்கு வரதாசார்யர் என்ற ஒரே குமாரர் பிறந்தார். கனிஷ்டைக்கு வேங்கடத்துறைவார், அப்பைய தீக்ஷிதர், எம்பெருமானார், ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் என்ற நான்கு புத்ரர்கள் உண்டாயினர். ஜ்யேஷ்டரான வரதாசார்யருக்கு ராமானுஜ தீக்ஷிதர், வேங்கட தீக்ஷிதர் என்று இரு குமாரர்கள். மருத்துவான்பாடி ராமானுஜ தீக்ஷிதரின் பெயரரான வீராபுரம் ராமானுஜ தீக்ஷிதரை சந்த்ரகிரி ராஜ பரம்பரையைச் சேர்ந்த திம்மையராஜன் என்ற அரசன் ஆசார்யராக அடைந்து திருக்கடல்மலை க்ஷேத்ரத்திற்கு ஸமீபத்தில் வீர்ராகவபுரம் என்கிற க்ராமத்தை நிர்மாணித்து இவரைக்கொண்டு ப்ரதிஷ்டை செய்து அங்கேயே தங்கியிருக்கும்படிச்செய்து ஸோமயாகம் முதல் வாஜபேயம் வரையிலான

யஜ்ஞுங்களை அனுஷ்டிக்கும்படிச் செய்துவைத்தான். அந்த க்ராமம், திம்மராஜ ஸமுத்ரம் என்றும், வீராபுரம் என்றும் வழங்கலாயிற்று. அங்கு ஸ்ரீ தேவப்பெருமாள் ஆலயத்தை ப்ரதிஷ்டை பண்ணி ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனம் செய்துவந்தபடியால் இவர் "வீராபுரம் ஆசார்யன்" என்ற ப்ரஸித்தியுடன் எழுந்தருளியிருந்தார். திருக்கடல்மலை எம்பெருமானைப் பரிவேட்டை உத்ஸவத்தின் போது வீராபுரத்திற்கு எழுந்தருளப் பண்ணியதுடன் மாசி மக உத்ஸவத்தின் போது திருக்கடல்மல்லையில் ஸ்ரீவைஷ்ணவ ததீயாராதனமும் நடத்தியதுடன் பங்குனி உத்திர உத்ஸவத்தையும் செய்துவைத்தார். அத்துடன் ஸ்ரீ தேவப்பெருமாள் சீவரம் கனு பார்வேட்டை உத்ஸவத்தின் போதும் ஸ்ரீவைஷ்ணவ ததீயாராதனத்தை நடத்திவைத்தார். பின்னாளில் வீராபுரத்திற்கு ஸமீபத்திலுள்ள ஈகை, கொத்திமங்கலம், புலிக்குன்றம் ஆகிய க்ராமங்களைச் சேர்ந்த ஸ்ரீ வைஷ்ணவர்களும் மேற்படி கைங்கர்யங்களில் ஈடுபட்டனர். ஈவரது தனியன் வருமாறு:

வங்கிவம்ச ஸமுத்பூதம் வீராபுர குருத்வஹம் |
வாஜபேயயாயஜூகம் வந்தே ராமாநுஜ குரும் ||

இவருக்கு ரங்கநாத தீக்ஷிதர், சிங்கராசார்யர், ரகுநாத தீக்ஷிதர், வேதாந்த தீக்ஷிதர், வரதாசார்யர், சடகோபாசார்யர் என்ற ஆறு குமாரர்கள் உண்டாயினர். ஜ்யேஷ்டரான ரங்கநாத தீக்ஷிதருக்கு சிங்கராசார்யர், ரங்கநாத தீக்ஷிதர் என்று இரண்டு குமாரர்கள் உண்டு. அவர்களில் சிங்கராசார்யருக்கு ஸந்ததி இல்லை. தீக்ஷிதர் ஸந்ததி அத்யாபி தொடர்ந்து வருகிறது. இரண்டாமவரான சிங்கராசார்யருக்கு ரங்கநாதன், ராமாநுஜன் என்று இரு புதல்வர்கள். அவர்களுக்கு ஸந்ததி இல்லை. மூன்றாமவரான ரகுநாத தீக்ஷிதர் குமாரர் வரதவேதாந்தாசார்யர். இவருக்கு ரகுநாதன், ஸ்ரீநிவாஸன் என்று இரு குமாரர்கள். ஜ்யேஷ்டருக்கு ஸந்ததி இல்லை. கனிஷ்டர் அன்யகோத்ர ஸ்வீகாரம் போனவர். நான்காவதான வேதாந்த தீக்ஷிதருக்கு ஸந்ததி இல்லை. ஐந்தாவதான வரதாசார்யருக்கு ச்யாமள தீக்ஷிதர், ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் என்று இரு குமாரர்கள். இவர்களில் கனிஷ்டர் ஆறாவதான சடகோபாசார்யருக்கு

ஸ்வீகாரம் போனவர். அவருக்கு ஸந்ததி இல்லை. ஜ்யேஷ்டரான ச்யாமள தீக்ஷிதருக்கு வரதாசார்யர், ஸ்ரீநிவாஸாசார்யர், ராகவாசார்யர் என்று மூன்று குமாரர்கள். இவர்களில் வரதாசார்யர் குமாரர் சடகோபாசார்யர். இவர் ஆசார்யராய் இருந்துகொண்டு ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனம் செய்தவர். இவரது தனியன்:

வங்கீசவம்ச வரதார்யஸுதம் ப்ரபத்யே
ஸ்ரீஸ்ரீநிவாஸகுருவர்ய க்ருபாத்தமந்த்ரம் ।
ஸ்ரீரங்கலக்ஷ்மண மஹாமுனினா
கரீசே நிக்ஷிப்தரக்ஷணபரம் சடகோபஸூரிம் ॥

என்பதாம். இவரது குமாரர் ஸ்ரீநிவாஸவரதாசார்யர். இவருக்கு ராமாநுஜ தீக்ஷிதர், யஜ்ஞ தீக்ஷிதர், வரத தீக்ஷிதர் என்று மூன்று குமாரர்கள். ஜ்யேஷ்டருடைய குமாரர் சடகோப தீக்ஷிதர். இவர் ந்யாய சாஸ்த்ர சிரோமணியாய் நாவல்பாக்கம் அக்நிஹோத்ரம் ஸ்ரீ உ.வே. நாராயண தாததேசிகன் ஸன்னதியில் வேதாந்த காலக்ஷேபங்கள் செய்து ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனம் செய்தவர். இவருக்கு ஸந்ததி இல்லை. ஸ்ரீ யஜ்ஞ தீக்ஷிதருடைய குமாரர் ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர். இவர் குமாரர்கள் சடகோப தீக்ஷிதர், வரதராஜ தீக்ஷிதர், ஸ்ரீதர தீக்ஷிதர் ஆகியோராவர். ஸ்ரீ வராத தீக்ஷிதருடைய குமாரர் வீரராகவ தீக்ஷிதர். இவர் குமாரர் ராமாநுஜ தீக்ஷிதர்.

ச்யாமள தீக்ஷிதரின் இரண்டாவது குமாரரான ஸ்ரீநிவாஸாசார்யர் அன்யகோத்ர ஸ்வீகாரம் போனவர். மூன்றாவது குமாரரான ராகவாசார்யர் குமாரர் லக்ஷ்மீநாத தீக்ஷிதர். இவர் நாவல்பாக்கம் ஸ்ரீமத் அண்ணயார்ய மஹாதேசிகன் குமாரத்தி கனகவல்லியை விவாஹம் செய்துகொண்டதுடன் அவரிடமே வேதாந்த காலக்ஷேபாதிகள் செய்து வீராபுரத்திலேயே பஞ்சகால பராயணராய் எழுந்தருளியிருந்தவர். இவர் அருளிச்செய்த க்ரந்தங்கள்: 1. ராமோதயமஞ்சரிசம்பூ 2. லக்ஷ்மீ ஸ்தோத்ரம், 3. ஸுதர்சன தண்டகம், 4. ஆசார்ய சரிதா நாடகம் ஆகியவைகள். இவரது அவதாரம் ஒரு சுபக்ருத் வருஷம் ஆவணி அனுஷ நக்ஷத்ரம். அவதார ஸமாபனம் தாரண வருஷம் மார்கழி சுக்ல பஞ்சமி

திதி. இவரது குமாரர் ஸ்ரீநிவாஸ ராகவ தீக்ஷிதர் பட்டப்பா என்று ப்ரஸித்தி பெற்றவர். இவர் வலயபேட்டை ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி (யதி) ஸன்னதியில் வேதாந்த காலக்ஷேபாதிகள் செய்து வித்வானாய் விளங்கியவர். இவருக்கு ஸந்ததி இல்லை. இவரது ஸஹோதரி கல்யாணியை காணியம்பாக்கம் இளையவில்லி வேதாந்தாசார்யர் விவாஹம் செய்துகொண்டார். இவரது ஸந்ததியினர் நாவல்பாக்கம் ஸ்ரீமத் அண்ணயார்ய மஹாதேசிகன் ஆசார்ய பரம்பரை ஸம்பந்தம் பெற்று விளங்கி வருகின்றனர்.

## வீராபுரம் வேங்கட தீக்ஷிதர் அவதாரம்

வீராபுரம் கூடஸ்தரான ராமாநுஜ தீக்ஷிதரின் ஜ்யேஷ்ட குமரர் ரங்கநாத தீக்ஷிதர். இவரது குமாரர் தீக்ஷிதர். இவரது கனிஷ்ட குமாரர் ரங்கநாத தீக்ஷிதர். இவர் குமாரர் வேங்கட தீக்ஷிதர். இவர் குமாரர் ராமாநுஜ தீக்ஷிதர். இவர் தமது வம்சத்தைச் சேர்ந்த சடகோபாசார்யரிடம் ஸம்ப்ரதாய க்ரந்தாதி அன்வயம் பெற்ற வலயபேட்டை ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ ஸ்வாமி ஸன்னதியில் பரஸமர்ப்பணம் செய்து பஞ்சகால பராயணராய் எழுந்தருளியிருந்தார். இவரது தனியன் வருமாறு: -

வங்கீச வம்ச கலசார்ணவ பூர்ணசந்த்ரம்
தத்வம்சரத்ன சடகோப பதாப்ஜ ப்ருங்கம் ।
வேதாந்த லக்ஷ்மண முநீந்த்ர க்ருதாத்மரக்ஷம்
ராமாநுஜார்ய குருவர்ய மஹம் ப்ரபத்யே ॥

இவர் காலத்தில் ஸ்ரீ ராகவாசார்யர், ஸ்ரீரங்காசார்யர், சேவூர் குப்புஸ்வாமி ஐயங்கார் ஆகியோரது மூன்று குடும்பங்கள் வீராபுரத்தில் குடியேறி மூன்று தலைமுறைகள் வாழ்ந்து வந்தன. ஸ்ரீ ராமாநுஜ தீக்ஷிதரின் குமாரர் ரங்கநாத தீக்ஷிதர். இவரது தனியன் வருமாறு:-

அபர்யாப்தாம்ருதாசார்யபாதாம்புஜ நிஷேவணம் ।
பாரத்வாஜம் ரங்கநாதம் ராமாநுஜஸுதம் பஜே ॥

இவரது ஜ்யேஷ்ட பத்னியினிடத்தில் அவதரித்தவர் ஸ்ரீ வேங்கட தீக்ஷிதரும், யஜ்ஞ தீக்ஷிதரும் ஆவர். கனிஷ்ட பத்னியினிடத்தில் அவதரித்தவர்கள், வரத தீக்ஷிதர், ராகவ தீக்ஷிதர், ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் ஆகியோராவர். இவர்களில் யஜ்ஞ தீக்ஷிதருக்கு ஸந்ததி இல்லை. வரத தீக்ஷிதர் ப்ரஹ்மச்சாரி. ராகவ தீக்ஷிதருக்கு பெண் ஸந்ததி. ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் குமாரர் தேவநாத தீக்ஷிதர். இவர்களில் ஜ்யேஷ்டரான ஸ்ரீ வேங்கட தீக்ஷிதர் ஸ்வாமி தான் இச் சரித்திர நாயகர். இவர் குமாரர் ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர். இவருக்கு இரண்டு குமாரர்கள். ஜ்யேஷ்ட குமாரர் வேங்கடேச தீக்ஷிதர், கனிஷ்ட குமாரர் நாராயண தீக்ஷிதர். வேங்கட தீக்ஷிதரின் திவ்ய சரிதத்தினை ஈண்டு விளக்கிடுவோமாக. இவரது தனியன் பின்வருமாறு:-

வங்கீசான்வய துக்தவாரிதிவிது ஸ்ரீரங்கநாதாஹ்வயாத்
தாதாதாத்த மநும் ந்ருஸிம்ஹ புதராட் ந்யஸ்தாத்ம ரக்ஷாபரம் ।
வித்வந்மாதுல க்ருஷ்ணதாதயகுரோ: ப்ராப்தாக மாந்தத்வயம்
ஸ்ரீமத் வேங்கடதீக்ஷிதம் புதமணிம் வந்தே சமாத்யாகரம் ॥

ஸ்ரீ வேங்கட தீக்ஷிதர் ஸ்வாமி ஒரு ப்ரபாவ வருஷம் கார்த்திகை மாதம் 6ம் தேதி (21.11.1927) சித்திரை நக்ஷத்ரத்தில் நாவல்பாக்கத்தில் தனது மாதுல க்ருஹத்தில் அவதரித்தார். இவரது தாயார் பெயர் ஸ்ரீரங்க அம்மங்கார். பிதா ரங்கநாத தீக்ஷிதர். இவர்களின் ஸீமந்த புத்ரராய் அவதரித்த இவர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து காண்போர் மனத்தைக் கவரும்படி விளங்கிவந்தார். இவருக்கு யதாகாலத்தில் சௌளம் நடைபெற்று கர்பாஷ்டமத்திலேயே உபநயனம் நாவல்பாக்கத்தில் பித்ருஸ்வஸா (அத்தை) க்ருஹத்தில் பிதாவால் நடத்திவைக்கப்பட்டது. மாசி மாதத்தில் உபநயனம் நடைபெற்ற பின் ஆவணி மாத உபாகர்மத்திற்கு இரண்டு நாள்கள் முன்பு த்ரயோதசி திதியில் இவரது மாதாவின் தேஹ வியோகம் ஏற்பட்டது. மாதாவின் வர்ஷாந்தர க்ரியைகளைச் செய்துகொண்டே வேதாத்யயனம் செய்துவந்தார். இது இவர் பின்னாளில் வைதிக கர்மாநுஷ்டானபரராய்

சிஷ்டாசாரத்துடன் யாவஜ்ஜீவனம் விளங்கியமைக்கு உந்துதலாய் இருந்ததென்றால் அது மிகையாகாது.

## வித்யாப்யாஸம்

இவர் உபநயனத்துக்குப் பிறகு தமது மாதுல க்ருஹத்தில் வஸித்துக்கொண்டு நாவல்பாக்கம் மஹாவித்வான் ஸ்ரீ உ.வே. அய்யா தேவநாத தாததேசிகன் ஸன்னதியில் வேதாத்யயனம் செய்துகொண்டு ராமாயண ஸங்க்ரஹம் முதல் காவ்ய நாடகங்களை வாசித்து தர்க்க ஸங்க்ரஹம், முக்தாவளி தினகரீயம், ஸித்தாந்த கௌமுதீ, மீமாம்ஸா பரிபாஷா, அர்த்த ஸங்க்ரஹம் வரையில் வாசித்து ஸம்ஸ்க்ருத பாஷா ஜ்ஞானத்தின் அடிப்படையை இளம் வயதிலேயே ஸ்திரமாகப் பெற்றிருந்தார். முதல் நாள் வாசித்த பாடத்தை மறுநாள் ஒப்புவித்தால் தான் அன்று மேற்கொண்டு பாடம் நடத்துவது என்கிற நியதியைக் கடைபிடித்தவர் ஸ்ரீமதுபயவே. அய்யா ஸ்வாமி. மறுநாள் ஒப்புவிக்காவிட்டால் அன்று அதைப் படித்து அதற்கு மறுநாள் ஒப்புவித்தால் தான் அதற்கு மறுநாள் பாடம் சொல்லுவார். இந்த நியதியில் மாறாட்டமில்லாமல் அன்றன்றைய பாடத்தை ஒப்புவித்தே இவர் பாடம் படிப்பார். இப்படி இவருக்குப் படிப்பிலிருந்த ஊக்கத்தையும், பால்யம் முதல் பொய்மை கலவாத யதார்த்தமான ஆசாரானுஷ்டானத்தையும், சாந்தமான குணத்தையும் கண்டு ஸ்ரீமத் ஸ்வாமி இவரிடம் தனியானதொரு வாத்ஸல்யத்துடனேயே இருந்துவந்தார். ஸ்ரீமத் ஸ்வாமிக்கு வித்யார்த்தி தசையில் இருப்பவர்கள் படிப்பைத் தவிர வேறு எந்தக் கார்யத்திலும் ஈடுபடக் கூடாது என்பது திருவுள்ளம். அவ்விதமே மற்றவர்களும் படிக்கும் மாணவர்களை வேறு எந்தக் கார்யத்திலும் ஈடுபடுத்தாமல் அவர்களைப் படிப்பில் மட்டும் கண்ணும் கருத்துமாய் இருக்கும்படிச் செய்யவேண்டும் என்பதும் திருவுள்ளமாகும். பின்னாளில் ஸ்ரீமத் ஸ்வாமி இவருக்கு வித்யாப்யாஸ காலத்தில் பந்துபரிபாலனம் இல்லாமலும், குடும்ப பாரம் இல்லாமலும், இருந்திருந்தால் உத்தமோத்தமமான பாண்டித்யம் பெற்று விளங்கியிருப்பார் என்று கூறி ப்ரசம்ஸித்தது உண்டு.

இவர் தமது க்ராமமான வீராபுரத்தில் இருந்தபோது அதற்கு அருகில் உள்ள கொத்திமங்கலத்தில் எழுந்தருளியிருந்த நாவல்பாக்கம் அக்நிஹோத்ரம் ஸ்ரீ உ.வே. நாராயண தாததேசிகன் ஸன்னதியில் வேதாத்யயனமும், ச்ரௌத சாஸ்த்ராப்யாஸமும் செய்தார். மேலும் அவ்வூரில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ வீரராகவ மஹாதேசிகனிடமும் சாஸ்த்ரார்த்தங்களைத் தெரிந்துகொண்டார். பின்னர் கலாசாலையில் சேர்வதற்காக திருவையாறு சென்றார். அங்கு தங்கிப் படிக்க சௌகர்யமில்லாமையால் திருப்பதிக்கு வந்து தமது ஜ்யேஷ்ட மாதுலருடன் தங்கியிருந்து திருப்பதி கலாசாலையில் சேர்ந்து படித்து 1946ல் ப்ரவேச பரீக்ஷையில் உத்தீர்ணரானார். இவருக்கு தாரண வருஷத்தில் 18வது வயதில் (1945) நாவல்பாக்கம் வலயபேட்டை ஸ்ரீக்ருஷ்ண தாததேசிகன் குமாரத்தி சௌபாக்யவதி. ஸுந்தரவல்லி அம்மங்காருடன் விவாஹம் நடைபெற்றது. பின்னர் 1947ல் ஸ்ரீபெரும்பூதூரில் குடும்பத்துடன் இருந்துகொண்டு ந்யாய சிரோமணி பரீக்ஷையில் 1950ல் உத்தீர்ணரானார். பிறகு ஸ்ரீபாஷ்யகாரர் அவதார ஸ்தலத்திலேயே "மாதுலாத் ஸகலா: கலா:" என்கிறபடி தமது மூத்த மாதுலரான நாவல்பாக்கம் ஸ்ரீ சடகோப க்ருஷ்ண தாததேசிகன் ஸன்னதியில் க்ரந்த சதுஷ்டய காலக்ஷேபத்தைச் செய்து க்ருதார்த்தரானார்.

## மயிலை வாஸம்

வேதாந்த காலக்ஷேபம் முடிந்தவுடன் தேஹ யாத்திரைக்காக இவர் ஸ்ரீ பேயாழ்வார் அவதார ஸ்தலமான மயிலாப்பூருக்கு எழுந்தருளி வாஸத்தை ஏற்படுத்திக்கொண்டார். இவருக்கு வித்யாப்ரதானமான அத்யாபன மூலம் குடும்ப ரக்ஷணத்தைச் செய்யவேண்டுமென்பது திருவுள்ளம். ஸம்ஸ்க்ருத வித்யைக்கு ஸ்தானம் உடனே கிடைக்கவில்லை. அரசினர் கீழைத்திசைச் சுவடி நூலகத்தில் மாத்ருகா லேகனத்தில் ஈடுபட்டதுடன், பாராயணங்கள், உபன்யாஸங்கள், ஆகியவைகளைச் செய்துகொண்டு தமிழ் அறிஞர் கி.வா. ஜகன்னாதன் ஐயர் முதலானவர்களிடம் தமிழ் நூல்களை வாசித்து 1955ல் தமிழ்

வித்வான் பரீக்ஷையில் தேறித் தமிழ்ப் பண்டிதரானார். தமிழாசிரியர் ஸ்தானான்வேஷணம் பண்ணியபோது இவரது ஸகாவான திருப்புட்குழி பட்டண்ணா என்கிற நரஸிம்ஹ தாதாசார்யரின் புருஷகாரத்தால் மயிலை பெண்ணாத்தூர் சுப்பிரமணியர் பள்ளியில் தமிழ் ஆசிரியர் ஸ்தானம் கிடைத்தது. அதிலேயே இருந்துகொண்டு அத்யாபன வ்ருத்தியில் சிறந்து விளங்கி தமது அறுபதாவது வயதில் 1987ல் வ்ருத்தியில் இருந்து நிவ்ருத்தரானார்.

## அடையாறு வாஸம்

இவர் 1962ல் சொந்தமான க்ருஹத்தை நிர்மாணித்து அடையாரில் வாஸம் செய்துவந்தார். அந்தக் காலத்தில் தான் மேற்கொண்டு சாஸ்த்ரங்களைக் கற்கவேண்டுமென்று பாரித்து வ்யாகரண சிரோமணி பரீக்ஷையை 1967லும், மீமாம்ஸா சிரோமணி பரீக்ஷையை 1970லும் எழுதி உத்தீர்ணரானார். இங்கு தான் இவர் தமது வயது முதிர்ந்த பிதாமஹியையும், பிதாவையும் உபசரித்து வந்தார். இவர் பிதாமஹி பரமபதித்தவுடன் தமது வயது முதிர்ந்த பிதா செய்யவேண்டிய வைதிக கர்மாக்களை உடனிருந்து யதா சாஸ்த்ரம் செய்துவைத்தார். இவரது பிதாமஹி பரமபதித்த எட்டாவது மாஸத்தில் பிதா 26.9.78ல் திருநாட்டுக்கு எழுந்தருளினார். அவரது வர்ஷாந்தர க்ரியை செய்துவந்ததுடன், நாவல்பாக்கம் ஸ்ரீ உ.வே. அய்யா தேவநாத தாதயார்ய மஹாதேசிகன் நியமனப்படி பிதா செய்திருக்கவேண்டிய பிதாமஹியின் மாஸ்யாதிகளையும் க்ரமமாகச் செய்து ஆப்திக பர்யந்தம் செய்து அத்துடன் நிறுத்திவிட்டு பிதாவின் கைங்கர்யங்களைச் செய்துமுடித்தார். பிதாமஹியின் ப்ரத்யாப்திகங்களைச் செய்யவில்லை. இப்படிப் பெரியோர்களின் நியமனத்தைச் சிரஸாவஹித்து அனுஷ்டானங்களைச் செய்தது குறிப்பிடத்தக்கது. பிறகு வேதச்ரேணி என்று ப்ரஸித்தி பெற்ற வேளச்சேரியில் தமது வாஸத்தைச் செய்து 12.6.2002ல் திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

## வித்வதக்ரேஸரர்

இவர் ந்யாய சிரோமணியில் உத்தீர்ணராய்த் தமிழ் வித்வான் பட்டம் பெற்ற பின் மேற்கொண்டு 1967ல் வ்யாகரண சிரோமணி பரீக்ஷையிலும் உத்தீர்ணரானார். அதற்காக விராம காலங்களில் நாவல்பாக்கம் சென்று ஸ்ரீமதுபயவே. அய்யா ஸ்வாமி ஸன்னதியில் மஹாபாஷ்யம் முதலிய க்ரந்தங்களை வாசித்தருளினர். மேற்கொண்டு 1970ல் மீமாம்ஸா சிரோமணி பரீக்ஷையில் உத்தீர்ணராய்ச் சதுஸ்சாஸ்த்ர வித்வானாய் விளங்கினார். இவர் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த மடாதிபதிகள் மற்றும் ஆச்ரமத்து ஸ்வாமிகள் நடத்தும் வித்வத் ஸதஸ்ஸுக்களில் தவறாமல் அன்வயித்து வித்வான்கள் மகிழும்படியாக விஷயங்களை எடுத்துரைப்பதில் வல்லவர். தன்னைப்போல் மற்றவர்களும் விளங்கவேண்டும் என்று கருதித் தன்னிடம் கேட்பவர்களுக்கு ஸதஸ்ஸில் சொல்லவேண்டிய விஷயங்களுக்கு அபூர்வமான சில குறிப்புக்களைக் கரவாது வழங்குவதை வழக்கமாகக் கொண்டவர். ஸதஸ்ஸை நடத்துபவர்கள் தேவரீர் போன்றவர்களுக்கு விஷயம் ஸாதிக்க வேண்டும் என்பது நிர்பந்தமில்லை என்றாலும் இவர் விஷயத்தை விஜ்ஞாபிக்காமல் இரார். காஞ்சியில் நடைபெற்றுவரும் குருவார ஸதஸ்ஸில் யாவஜ்ஜீவனம் அன்வயித்து தர்க்கம், வ்யாகரணம், மீமாம்ஸை ஆகிய மூன்று சாஸ்த்ரங்களிலும் விஷய விவேசனம் செய்தருளி அங்கிருந்த அத்வைத வித்வான்களின் பாராட்டுதலுக்கு உரியவராயிருந்தார். காஞ்சீ தேவப்பெருமாள் வைசாகோத்ஸவத்தில் நடைபெறும் ஸ்ரீபாஷ்ய வித்வத் ஸதஸ்ஸில் யாவஜ்ஜீவனம் அன்வயித்தவர். அதை நடத்தும் ஸபையின் ஸ்தாபன உபதலைவராய் இருந்து பின்னர் தமது ஜீவித காலம் வரையில் தலைவராக இருந்து நடத்திவைத்தார். ஸபையில் விஷயம் ஸாதிப்பவர்களுக்குச் சிறுசிறு விளக்கங்களை இடையிடையே கூறி உத்ஸாஹப்படுத்தி விஷயம் முழுவதையும் நன்றாகச் சொல்லும்படி செய்து மகிழ்வார். மேலும் இவர் பலபேர்களுக்கு வேதாந்த க்ரந்தங்களைக் காலக்ஷேபம் ஸாதித்து அநுக்ரஹித்துள்ளார். இந்த ஸ்வாமி திருப்பதி கேந்த்ரிய வித்யாபீடத்தில் சுமார் நான்கு வருஷங்கள் ஒருங்கிணைப்பாளராகப் பணி செய்து பாரத

தேசத்தின் ப்ரஸித்தமான மீமாம்ஸா சாஸ்த்ர வல்லுநர்களோடு நேர்முகம் கண்டு சுமார் 8000 பக்கம் கொண்ட மீமாம்ஸா சாஸ்த்ர விஷயங்களைத் தொகுத்துக் கைப்பிரதி செய்து அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஸ்வாமியின் வைதுஷ்யத்தைக் கண்டு மகிழ்ந்த பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவன் "தேசிக தர்சன சூடாமணி:" என்ற விருதினை வழங்கி அநுக்ரஹித்தார். இவர் ந்யாய ஸித்தாஞ்ஜனத்திற்கு எழுதிய தமிழ் மொழிபெயர்ப்பினைக் கருதி ஸேவா ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி தமது வேதாந்த தேசிக அநுஸந்தான கேந்த்ரம் மூலமாக "தேசிக தர்சன ஸேவதி:" என்ற விருதினை வழங்கி கௌரவித்தார். மேலும் 1996ல் நாவல்பாக்கம் ஸ்ரீமதுபயவேதாந்தாபிவர்தினீ ஸமிதியினரால் "வேதோபய மீமாம்ஸா வல்லபர்" என்ற விருது வழங்கப்பட்டது.

இவர் "தத்பித்ருஷ்வஸு: புத்ர:" (அத்தையின் பிள்ளை) என்றபடியான அடியேனிடம் "ஸ்ரீக்ருஷ்ணன் அர்ஜுனனிடத்தில் வைத்திருந்த அலாதியானதொரு ப்ரீதியைப் போல்" பக்ஷபாதம் கொண்டு அநுக்ரஹம் செய்தது அடியேனது பாக்ய விசேஷமாகும். இது அடியேனுடைய பூர்வஜன்ம ஸுக்ருத விசேஷம் என்பதில் ஐயமே இல்லை. அடியேன் ஸாஹித்ய அத்வைத வேதாந்த ந்யாயசிரோமணி பரீக்ஷையில் உத்தீர்ணனானதற்கு இந்த ஸ்வாமி கொடுத்த ஊக்கமே காரணமாகும். வ்யாஸங்கள் எழுதும்பொழுது அவரிடம் காண்பிப்பது வழக்கம். அவர் அதைப் பார்த்து ப்ரமேயத்தில் விரோதமில்லாமல் இருக்கிறதா என்று பார்த்துத் திருத்தங்கள் செய்வார். இப்படி அவருடன் ஆழ்ந்து பழகி ஒழுகி வந்ததால் அவர் பரமபதித்த பின் நாம் இனிமேல் ஒன்றுமே செய்யமுடியாதோ என்ற பய உணர்வு அடியேனுக்கு ஏற்பட்டதுண்டு. இதரர் சிலரும் அவ்வாறு அதிசங்கைப்பட்டது உண்டு. ஆனால் அந்த ஸ்வாமியின் "அஸௌஸ்யாத்" என்கிற அநுக்ரஹ விசேஷம் தான் அடியேனை இன்றளவும் விஷயங்கள் எழுதத் தூண்டி விருதினையும் பெற வைத்திருக்கிறதென்றால் அது மிகையாகாது.

## ஆத்ம குண ஸம்பன்னர்

இவர் கௌதம மஹர்ஷி கூறியுள்ள எட்டு விதமான ஆத்மகுணங்களும் நிரம்பியவர். சுசி: என்பதற்கு "சாஸ்த்ர விஹித த்ரவ்ய வர்த்திதகாய: சுசி:" (தர்ம வழியிலே ஸம்பாதிக்கப்பட்ட த்ரவ்யத்தைக் கொண்டு வளர்க்கப்பட்ட சரீரத்தை உடையவன்) என்று பொருள் கூறுகிறார் ஸ்வாமி தேசிகன். மேலும் சுசீனாம் என்பதற்கு ஸர்வப்ரகாரத்தாலும் சுத்தியுடையவர்கள் என்றும் பொருள் காட்டுகிறார். "யோர்த்தச் சுசி: ஸ சுசி: நம்ருத்வாரிணா சுசி:" என்கிறது தர்மசாஸ்த்ரம். அதாவது மண்ணைக்கொண்டும், ஜலத்தைக் கொண்டும் சுத்தம் செய்வது மட்டும் அல்ல. எவன் பண விஷயங்களிலும் தூய்மையாக இருக்கிறானோ அவனே சுத்தன் எனப்பட்டதாம். இவர் இப்படிப்பட்ட சுத்தத்தை எப்பொழுதும் கடைபிடித்தவர். பிறரது த்ரவ்யத்திற்கு ஆசைப்படாமல் தமது த்ரவ்யம் பிறருக்கு உபயோகப்படும்படியாக வாழ்ந்தவர். சுசித்வத்துடன் ஸௌசீல்யத்வமும் உடையவர். தம்மைவிடத் தாழ்ந்தவர்களிடத்தும் ஸகஜமாகப் பழகும் எளிமை உடையவர். ஸ்மிதஹிதபூர்வாபிபாஷி, பரக்ஷேமாபிலாஷி, காம க்ரோத லோப மோஹ மத மாத்ஸர்யாதிகள் லவலேசமும் இல்லாதவர். எல்லோரிடத்திலும் இனிமையாகப் பழகும் பண்புடையவர். பந்து பரிபாலனமும் பண்ணி ப்ரீதியுடன் விளங்கியவர். பிறர் தன்னை இகழ்ந்தாலும் பரரந்த்ரேஷு ஜாத்யந்த: (பிறருடைய குற்றங்களைக் காண்பதில் பிறவிக்குருடராய் இருப்பவர்) என்றபடி காணாக்கண்ணிட்டு மனமுகங்களில் சிறிது மாறுபாடும் இன்றி ஸஹஜமாகப் பழகும் இயல்பினர்.

## அர்ச்சாவதார ரஸிகர்

கோவிலில் கைங்கர்யம் செய்த வம்சத்தில் அவதரித்தபடியால் அர்ச்சாவதார ஈடுபாடு இவருக்கு ஸ்வாபாவிகமாகவே இருந்தது. கோயில், திருமலை, பெருமாள்கோவில் எம்பெருமான்களிடத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. காஞ்சீ வைசாகோத்ஸவத்தில் ப்ரதி வருஷம் நியமேன எழுந்தருளி வேத பாராயணத்தில் அந்வயிப்பவர். திருப்பதியில் பல

வர்ஷங்கள் நித்யவாஸம் செய்து அலர்மேல்மங்கைத் தாயாரையும், திருவேங்கடமுடையானையும் பல முறை ஸேவித்து அனுபவித்தவர். இவரது பிதாமஹியின் அபிலாஷையைப் பூர்த்தி செய்வதற்காக வயோதிகரான அவரைத் திருநாராயணபுரத்திற்கு அழைத்துச்சென்று திருநாராயணன், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஆகிய எம்பெருமான்களை ஸேவிக்கும்படிச் செய்து தாமும் அனுபவித்து, கல்யாணி புஷ்கரிணியில் நீராடி தத்பரிஸநவர்த்தியான புலிஸ்வர்கம், தொண்டனூர் ஏரி முதலான ஸ்தானங்களையும் பார்த்து அனுபவித்தவர். இவர் ஆஸேது ஹிமாசலம் தீர்த்தயாத்ரை செய்து அவ்வோ எம்பெருமான்களை ஸேவித்து மகிழ்ந்தவர். ஸிம்ஹாசலம், பூரி ஜகன்னாதம், கயை, அயோத்தி, ஹரித்வார், ஹ்ருஷீகேசம், பதரிகாச்ரமம், குருக்ஷேத்ரம் முதலான ஸ்தலங்களுக்கு எழுந்தருளியதுடன் கயையில் ச்ராத்தம் செய்து அக்ஷயவடத்தில் பிண்டதானம் செய்து, பதரீகாச்ரமத்தில் ப்ரஹ்மகபாலத்தில் பிண்டதானமும் செய்து க்ருதார்த்தரானார்.

இப்படி அர்ச்சாவதார ஸேவைகளிலும், புண்ய தீர்த்த ஸ்நானங்களிலும் ஈடுபாடு கொண்ட இவருக்குத் தமது க்ராமமான வீராபுரத்தில் சிதிலமாகிவிட்ட தேவாதிராஜன் ஸன்னதியைப் புதுப்பித்துத் திருவேங்கடமுடையானை எழுந்தருளப்பண்ணி ப்ரதிஷ்டை செய்து ஆராதிக்கவேணுமென்று திருவுள்ளம் ஏற்பட்டு, அவர் மாப்பிள்ளை ஸ்ரீ உ.வே. தேவராஜாசார்யர், ஸ்ரீ உ.வே. வீராபுரம் சடகோப தீக்ஷிதர், அவருடைய தம்பிகள் ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர், வீரராகவ தீக்ஷிதர், சடமர்ஷண வம்ச்யர்களான தனது பித்ருஸ்வஸு: புத்ரர்கள் (அத்தையின் பிள்ளைகள்) மற்றும் அபிமானிகளின் ஸஹாயத்துடன் ஜீர்ணோத்தாரணம் பண்ணிச் சித்ரபானு வருஷம் வைகாசி மாதம் 23ஆம் தேதியன்று (6.6.2002) ஸம்ப்ரோக்ஷணம் விமர்சையாக நடத்தப்பெற்றது. இவரது வம்ச கூடஸ்தரான வங்கீபுரத்தாச்சிகள் தமது குமாரத்தியை ஸ்ரீமந் நாதமுனிகளுக்கு கன்யகாதானம் செய்துகொடுத்து சடமர்ஷண வம்ச ஸம்பந்தத்தை விரும்பிப்பெற்றார். இந்த ஸ்வாமியின் ப்ரபிதாமஹன், பிதாமஹன், பிதா, புத்ரரான இவர், இவரது கனிஷ்ட ப்ராதா, இவரது குமாரர் ஆகிய அனைவரும் ஐந்து தலைமுறை பரம்பரையாக

நாவல்பாக்கம் சடமர்ஷண வம்ச ஸம்பந்தம் பெற்றவர்கள். இந்த வம்சத்தைச் சேர்ந்த மற்றவர்களில் சிலருக்குக் கூட நாவல்பாக்கம் ஸம்பந்தம் உண்டு. இப்படிப்பட்ட பரஸ்பர பாந்தவ்யத்திற்கு அநுரூபமாக இருக்கும்படிக்கு சடமர்ஷண வம்ச்யர்களான நாவல்பாக்கம் அக்நிஹோத்ரம் வரத தாதாசார்ய ஸ்வாமி, வலயபேட்டை ராமாநுஜ தாதாசார்ய ஸ்வாமி, சடகோப ராமாநுஜ தாதாசார்ய ஸ்வாமி ஆகியோர் எழுந்தருளியிருந்து சிறப்பாக நடத்திவைத்தனர். இந்த மஹோத்ஸவத்தினைக் கண்டு புளகாங்கிதரான இவர் தமது அவதார பலன் நிறைவேறிவிட்டதெனக் கருதி சித்ரபானு வருஷம் வைகாசி மாதம் 29ம் தேதியன்று (12.6.2002) அவதார ஸமாபனம் செய்து பரமபதத்திற்கு எழுந்தருளினார்.

## நிகமனம்

இவரது ஜ்ஞான விகாஸத்திற்கு எடுத்துக்காட்டாக இவர் கத்யத்ரயம், ந்யாய ஸித்தாஞ்ஜனம், ஹயசிரோபாக்யான வ்யாக்யானம், நாராயணீயம், வ்ருக்ஷாயுர்வேதம், வேதாந்த ஸாரம் ஆகிய க்ரந்தங்களுக்கு ஸகலரும் அறியும்படியாக இயற்றிய தமிழ் உரைகளும், ஸ்ரீமத் அய்யா ஸ்வாமி விஷயமாக ஸம்ஸ்க்ருதத்தில் இயற்றிய ஆசார்ய தினசர்யா என்கிற க்ரந்தமும் அமைந்துள்ளன. இவரது அனுஷ்டான வைகரியானது இவரது குமாரர் லௌகிக பாஷா ஜ்ஞானத்துடன் லௌகிக வ்ருத்தியில் ஈடுபட்டிருந்தபோதும் அவரைத் தாம் யதாவத்தாக அநுஷ்டித்துவந்த ஆசாரத்தில் பழக்கிவைத்து அத்யாபி அநுஸந்திக்கச் செய்திருப்பதால் அன்வர்த்தமாய் விளங்கும்படியாயிற்று. இவரது வைராக்ய நிஷ்டையானது இவருக்கு எம்பெருமானிடத்தில் உண்டான மஹாவிச்வாஸத்திற்கு அளவுகோலாய்த் தமது முன்னோர்களால் நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தை எப்பாடு பட்டேனும் ஜீர்ணோத்தாரணம் செய்து ப்ரதிஷ்டை செய்துவிடவேணும் என்று வைராக்யத்துடனிருந்து பூர்த்தி செய்த பின் எம்பெருமான் ப்ரீதியடைந்து தன்னடிச்சோதிக்கு அழைத்துச்செல்லும்படியான பராகாஷ்டையைப் பெற்றதாயிற்று. இத்தகைய பாக்யம் ஆத்மஜ்ஞானிகளான சிலருக்கே கிட்டுவதாகும். ஆசார்யபுருஷ வம்சத்தில் அவதரித்து ஸ்வயம் ஆசார்யகத்வ

யோக்யதையை ஏற்படுத்தி அனுஷ்டிக்கும்படிச் செய்துவைத்தபடியால் இவர் அத்யாபி யச: காயராய் (புகழுடம்பினராய்) விளங்கிவருகிறார் என்பது திண்ணம்.

வங்கீசவம்ச்ய விபுதாக்ரகண்யம்
விசுத்த கர்மா சரணே விதீப்தம் ।
வைராக்ய நிஷ்டம் வினையைகபூமிம்
வந்தே வரம் வேங்கட தீக்ஷிதார்யம் ॥

இதிநாத குலோத் வஹராமாநுஜ
தாதய தேசிக ரசிதம் சரிதம் ।
ச்ருதிஸௌபகதாம் பஜதாம் திசதாம்
வரவேங்கட தீக்ஷித ஸத்குணதாம் ॥

## ஸ்ரீமத் ஸ்வாமி தனியன்

வங்கீசான்வய துக்தவாரிதிவிது ஸ்ரீரங்கநாதாஹ்வயாத்
தாதாதாத்த மநும் ந்ருஸிம்ஹ புதராட் ந்யஸ்தாத்ம ரக்ஷாபரம் ।
வித்வந்மாதுல க்ருஷ்ணதாதயகுரோ: ப்ராப்தாக மாந்தத்வயம்
ஸ்ரீமத் வேங்கடதீக்ஷிதம் புதமணிம் வந்தே ஶமாத்யாகரம் ॥

ஸ்ரீமதே வேங்கட தீக்ஷிதார்ய மஹாதேசிகாய நம:

## நம் ஸ்வாமியைப் பற்றிச் சில மஹான்கள் அருளிச்செய்த வார்த்தைகள்

ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி பறவாக்கோட்டை ஸ்ரீமத் ஆண்டவன்
ஸ்ரீ கோபாலதேசிக மஹாதேசிகன்

### பேரறிவாளர்

இந்த ஸ்வாமி ஸம்ஸ்க்ருதம், தமிழ் இரண்டிலும் பேரறிவு உடையவர். சிறந்த தமிழ் எழுத்தாளர். இவர் கட்டுரைகளைப் படிப்பவர் இவர் தமிழ் நடையைப் பற்றி நன்கு அறிவர். சிக்கலான சாஸ்த்ர விஷயங்களையும்

எளிய நடையில் படிப்போர் உள்ளத்தைக் கவரும்படி இனிதாக விவரித்து உரைப்பதில் வல்லவர்.

ஸ்ரீமதுபயவே. ஸ்ரீபாஷ்ய ஸிம்ஹாஸனம். புரிசை. நடாதூர்.
ஸ்ரீக்ருஷ்ணமார்ய மஹாதேசிகன்

## ஆத்மகுணாட்யர்

தர்க்க வ்யாகரண பூர்வோத்தர மீமாம்ஸா சாஸ்த்ரங்களை நன்கு அப்யஸித்து ந்யாய வ்யாகரண மீமாம்ஸா சாஸ்த்ரங்களில் சிரோமணி பட்டம் பெற்றிருக்கிறார். தமிழ் வித்வான் பட்டமும் பெற்றுள்ளார். ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் ஸ்ரீக்ருஷ்ண தாதார்ய மஹாதேசிகன் ஸந்நிதியில் காலக்ஷேபம் பண்ணியுள்ளார். மஹாசாந்தர். அஹங்கார லேசமும் இந்த ஸ்வாமியிடம் காணமுடியாது. இவ்விதம் ஸகல குணங்களுடன் நல்ல பாண்டித்யத்தைப் பெற்று இந்த ஸ்வாமி ந்யாய ஸித்தாஞ்ஜனத்திற்கு எழுதிய வ்யாக்யானம் வித்வத் ச்ரேஷ்டர்கள் கொண்டாடும்படியாக நன்கு அமைந்துள்ளது.

ஸ்ரீமதுபயவே. மஹாமஹோபாத்யாய. திருமலை. சதுர்வேத சதக்ரது.
நாவல்பாக்கம். சடகோப ராமாநுஜ தாதயார்ய மஹாதேசிகன்
(ஸ்ரீ NSR ஸ்வாமி)

## நீறு பூத்த நெருப்பு

வேதாத்யயனம் பண்ணியவர். ந்யாயம், வ்யாகரணம், மீமாம்ஸா, வேதாந்தம் ஆகிய நான்கு சாஸ்த்ரங்களையும் ஸ்ரீ உ.வே. அய்யா தேவநாதாசார்ய மஹாதேசிகன், ஸ்ரீ உ.வே. ஸோமயாஜி நாராயண தாதாசார்ய மஹாதேசிகன், ஸ்ரீ உ.வே. க்ருஷ்ணஸ்வாமி தாதாசார்ய மஹாதேசிகன் இவர்களிடமும், மற்ற பெரியோர்களிடமும் கசடறக் கற்றவர். கி.வ. ஜகன்னாதன் முதலியவர்களிடம் தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைப் பயின்று தமிழ் வித்வான் பரீக்ஷையிலும் தேறியவர். சாம்பல் பூத்த நெருப்பு போல் தன்னுடைய பாண்டித்யம் வெளியில் தெரியாதது போல், “பால்யேன திஷ்டாஸேத்” என்கிற ரீதியில்

விளங்கியவர். “மாதுலாத் ஸகலா: கலா:” என்கிறபடி மாமாவிடமிருந்து வித்யையுடன் ஆத்மகுணங்களையும் பெற்றவர். இவருக்கு இவ்வளவு பாண்டித்யம் உள்ளது என்பதை மிகமிகச் சில பண்டிதரே அறிவர்.

இக்காலத்தில் ஆடம்பரம் இராமல் ஆத்மகுணம் அதிகமாக இருந்தாலும் பலபேர்களுக்கு மதிப்பு ஏற்படுவதில்லை. இதை அடியேன் எழுதுவது எதற்கென்றால், இவர் சதுச்சாஸ்த்ரங்களிலும் பரிபூர்ணமாகப் பாண்டித்யம் உள்ளவர், பரமசாந்தர் என்பதையும் உலகத்தார் அறிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகவே. "வித்வானேவ விஜானாதி வித்வஜ்ஜன பரிச்ரமம்" என்றபடி அடியேன் இவருடைய வைதுஷ்யத்தை அறிந்துகொண்டுள்ளேன். எல்லோருக்கும் நன்மையையே விரும்புவாரே தவிர, யாருக்கும் கெடுதலை நினைக்கமாட்டார். ஒரு சமயம் யாரோ கரப்பான்பூச்சியைத் துடப்பத்தால் அடிக்கும்பொழுது அவரைப் பார்த்து அம்மாதிரி அடித்துக் கொல்லக்கூடாது; வேணுமானால் மெதுவாக தூரே தள்ளவும் என்றார். இது ஸர்வ ஜந்துக்களுக்கும் ஹிதைஷி என்பதற்கு உதாஹரணமாகும். எல்லோரும் அவரவர்களுடைய அனுபவத்தில் அந்த ஸ்வாமியின் இந்த உயர்ந்த குணத்தைக் கண்டவர்கள்.

ஸ்ரீமதுபயவே. மஹாமஹோபாத்யாய. திருமலை. சதுர்வேத சதக்ரது.
நாவல்பாக்கம். வலயபேட்டை. ராமாநுஜ தாதயார்ய மஹாதேசிகன்

## நாம் அனுபவித்த ஸௌலப்யம்

என் ஸஹோதரியின் ப்ரிய பர்த்தாவான இவரிடம் ஸௌலப்ய குணம் பரிபூர்ணமாகக் குடிகொண்டிருந்தது என்றால் மிகையாகாது. இவருக்கு விரோதி என்பவரே கிடையாது. சிறு குழந்தையாகட்டும், பெரிய மனிதராகட்டும் யாராக இருந்தாலும் க்ருஹத்திற்குள் நுழையும்போதே தலையாட்டிக்கொண்டு புன்சிரிப்புடன் கண்களில் வாத்ஸல்யம் மிளிர ஹார்தமாக 'வா' என்று கூப்பிடும் விதம் உள்ளதே, இது ஒன்றே போதும். அவருடைய ஸௌலப்யத்தை ப்ரகாசம் செய்ய எவ்வளவு நெருக்கடியாக இருந்தாலும், எவ்வளவு சிரமமாக இருந்தாலும் தன்னால் முடிந்த கார்யத்தை ஒருபொழுதும் தட்டிக்கழித்ததே இல்லை. வைதிக

கார்யங்களுக்கு பூணூலாகட்டும் பஞ்சகவ்யமாகட்டும் மற்றும் எதுவாக இருந்தாலும் தீக்ஷிதர் ஸ்வாமியிடம் சென்றால் நடந்துவிடும் என்கிற நம்பிக்கையுடன் செல்லக்கூடிய ஒரே மனிதராகத் திகழ்ந்தவர். வைதிக ஸமூஹத்திலும் லௌகிக வர்க்கத்திலும் நிஷ்கபடமாகப் பழகி எல்லோராலும் போற்றப்பட்டு விளங்கினார். இந்த ஸ்வாமிக்குப் பெரியவர்களிடம் பேசுவதில் எவ்வளவு உத்ஸாஹமோ, அதற்குமேல் குழந்தைகளிடமும், மாணாக்கர்களிடமும் பழகுவதில் உத்ஸாஹம் இருந்தது. ஸ்வாமியினுடைய நகைச்சுவை உணர்வை ரஸிப்பதற்கு ஒரு ஸாமர்த்யம் வேண்டும்.

கண்ணனிடம் உத்தவர், அக்ரூரர் போன்ற மஹான்களும் பழகினர்; திருவாயர்பாடியில் இருந்த கோபாலர்களும் தோளோடு தோளாகப் பழகினர். அவ்வாறே இந்த ஸ்வாமியும் மஹாவித்வான்களான ஸ்ரீ உ.வே. அய்யா ஸ்வாமி, ஸ்ரீ உ.வே. ஸோமயாஜி அக்னிஹோத்ரம் ஸ்வாமி, ஸ்ரீ உ.வே. D.T தாதாசார்ய ஸ்வாமி, மாதுலர் ஸ்வாமி போன்றோர்களுக்கும் "தீக்ஷிதர், தீக்ஷிதர்" என்று பரம ப்ரீதி பாத்ரமாக எழுந்தருளியிருந்தார். எங்களைப் போன்ற ஸமான ஸ்கந்தர்களுக்கும், மற்றும், தான் லௌகிகமாக இருந்தாலும் வைதிகத்தில் ச்ரத்தை இருந்தவர்களுக்கும், கொண்டாடும்படியாக இருந்தவர். மொத்தத்தில் இவர் ஆஜானசுத்தர், கர்மாநுஷ்டானத்தில் மிகவும் ஊற்றமுடையவர், பரம ஸாத்விகர், பந்துப்ரீதர், பரோபகார ஸ்வபாவமுடையவர், நல்ல பாண்டித்யமுடையவர், லேகனாந்த பாண்டித்யமுடையவர். ச்ரமப்பட்டு விஷயத்தை க்ரஹித்தவர், ம்ருதுவான ஸ்வபாவத்தை உடையவர், ச்ரௌத கர்மாநுஷ்டானத்தில் ஊற்றம் உடையவர், நல்ல மேதாவீ, ஆத்மகுண பரிபூர்ணர், ஆசார சீலர்.

தீக்ஷிதர் இரு மூன்று ஸந்தைகளிலேயே வேதம் கைவரப் பெற்றவர். காலையில் ஸம்ஹிதையை அத்யயனம் பண்ணி அதனை க்ரஹித்து பதம் க்ரமம் அத்யயனம் பண்ணாமலே ப்ரஹ்மோத்ஸவத்தில் மாலை க்ரம பாராயணத்தில் அந்வயித்துத் தப்பாமல் க்ரம பாராயணம் பண்ணும் ஆற்றல் பெற்றவர். வித்யாவிநய ஸம்பன்னர். ச்ரௌதகர்ம சதுரர்,

ஸர்வபூத ஸுஹ்ருத். நிகரற்ற சௌஹார்தத்தாலே தர்மபுத்ரர் போல் அஜாத சத்ருவாய் வாழ்ந்த மஹான்.

*************************

நன்றி: ஸ்ரீமதுபயவே. வீராபுரம். வேங்கட தீக்ஷிதர் ஸ்வாமி சதாபிஷேக மஹோத்ஸவ மலர்.

ப்ரதி அருளியமைக்காக அநேககோடி க்ருதஜ்ஞதாரூப ப்ரணாமங்களுக்கு உரியவர்கள்:

1. ஸ்ரீ உ.வே. வீராபுரம். ஸ்ரீநிவாஸ தீக்ஷிதர் ஸ்வாமி, வேளச்சேரி.
2. ஸ்ரீ உ.வே. நாவல்பாக்கம். ஜகன்னாத தாதாசார்ய ஸ்வாமி, திருவல்லிக்கேணி.

